RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s212

OPEN ACCESS

# ஜென் கதைகளின் அமைப்பும் உள்ளடக்கமும்

## மு. அஜீத் குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-600059, தமிழ்நாடு, இந்தியா.

# The Structure and Content of Zen Stories

## M. Ajith Kumar [a, *]

[a] Department of Tamil, Madras Christian College, Tambaram-600059, Tamil Nadu, India

* Corresponding Author:
ajithgeetha96@gmail.com

Received: 29-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

Zen stories are believed to have been used by priests for centuries to teach disciples. The priests have structured and presented their experiences and their ancestors as stories. Zen stories record the cultural changes that took place in the society and is about the concepts necessary for people's lives. These stories explain the structures like family, group, society and the feelings that unite people in the name of God, caste, religion, tolerance, equality, faith etc. Such Zen stories has folklore elements. Zen stories are thought-provoking, makes us to laugh-out-loud and conveys the traditional ideas. This article discusses other folk motifs found in Zen stories. Also, in this article, the Zen stories are compiled and sorted into four categories: wisdom and ignorance, action, desire less-ness and impermanence.

**Keywords:** Zen Stories, Structure, Category, Ideas, Wisdom and Ignorance, Action, Reluctance and Instability, Accepting existence

## முன்னுரை

ஜென் கதைகள் கதை சொல்லிகள் வழி பல தலைமுறைகள் கடந்து நிற்கக் கூடிய நாட்டுப்புற கதைகளாகும். ஜென் கதைகளானது பல நூற்றாண்டுகளாக குருமார்களால் சீடர்களுக்கு போதனைகளைப் போதிக்க பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுகின்றது. குருமார்கள் தங்களின் அனுபவங்களையும், அவர்களின் மூதாதையர்களின் அனுபவங்களையும் கதைகளாக கட்டமைத்து வழங்கியுள்ளனர். அக்கதைகளின் அமைப்பு மற்றும் அக்கதைகளுக்கு மையப்பொருளாய் அமையும் கருத்துகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு அணுகுமுறை

ஜென் கதைகளின் அமைப்பு மற்றும் உள்ளடக்க கருத்துகளைப் புலப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் ஜென் கதைகளின் அமைப்பு நாட்டுப்புற கதைகளின் அமைப்புடன் ஒத்துள்ளதை விவரிக்க விளக்கமுறை அணுகுமுறையும், ஜென் கதைகளின் மொழிநடை, கதைமாந்தர்கள், துவக்கம், முடிவு ஆகியன நாட்டுப்புற கதைகளுடன் ஒத்துள்ளதை நிறுவ ஒப்பீட்டு அணுகுமுறையும், ஜென் கதைகளின் உள்ளடக்க கருத்துகளைத் தொகுத்து ஞானமும் அறியாமையும், வினை, ஆசையின்மையும் நிலையாமையும், உள்ளதை ஏற்றல் ஆகிய நான்கு பிரிவுகளில் பகுத்து வரிசைப்படுத்த பகுப்புமுறை அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு எல்லை

குருஜி வாசுதேவ் - ஜென் தத்துவக் கதைகள், ப்ரியா பாலு - ஜென் கதைகள் ஆகிய நூல்களிலுள்ள கதைகளை ஆய்வு எல்லையாக வரையறுக்கப்பட்டு ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. மேலும் சக்தி வேல்.சு. - நாட்டுப்புற இயல் ஆய்வு, சண்முகம சுந்தரம்.சு. - நாட்டுப்புறவியல், லூர்து.தே. -நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், கூகுள் மொழிபெயர்ப்பி ஆகியனவற்றை துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## ஜென் கதைகளின் அமைப்பு

ஜென் கதைகள் நாட்டுப்புற இலக்கிய வகைமையைச் சார்ந்தவைகளாகும். இது சமூகத்தில் ஏற்படும் பண்பாட்டு மாற்றங்களையும், மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான கருத்துகளையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. இக்கதைகள் குடும்பம், குழு, சமூகம் போன்ற கட்டமைப்புகளையும், மக்களை ஒன்றிணைக்கக்கூடிய உணர்வுகளான கடவுள், சாதி, மதம், சகிப்புத்தன்மை, சமத்துவம், நம்பிக்கை போன்றனவற்றையும் விளக்குவதாக உள்ளன. குறிப்பாக சிரிக்க மற்றும் சிந்திக்கச் செய்பவைகளாகவும், மரபு மற்றும் நீதி கருத்துகளை அறிவுறுத்தக் கூடியவைகளாகவும் ஜென் கதைகள் திகழ்கின்றன. இவை நாட்டுப்புற இலக்கியங்களுக்கான முக்கிய பண்பாகக் கருதப்படுகிறது.

## நாட்டுப்புறக் கதைகளின் வகைமையில் ஜென் கதைகள்

நாட்டுப்புறக் கதைகளை வகைப்படுத்தும் தன்மையினை ஒப்பியல் ஆய்வு முறையானது ஏற்கிறது. நாட்டுப்புறக் கதைகளைப் பற்றி வெளிவந்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட வகைப்பாடுகள் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களால் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஜென் கதைகள் பழமரபுக்கதைகள் வகைமையைச் சேர்ந்தவையாகும். பழமரபுக்கதைகளின் தன்மை குறித்து நாட்டுப்புற ஆய்வுலக முன்னோடியாகத் திகழும் தே. லூர்து பின்வருமாறு பதிவு செய்கிறார். அதுவாவது, “பழமரபுக்கதைகள் கவிதையிலும் உரைநடையிலும் எடுத்துரைக்கப்படும் நாட்டார் வழக்காறுகளுள் ஒன்றாகும். கவிதையில் எடுத்துரைக்கப்படும் கதைகளைப் பழமரபுக் கதைப்பாடல்கள் அல்லது காப்பியங்கள் என்று குறிப்பிடலாம். புராணக்கதைகளைப் போலவே பழமரபுக் கதைகளும் அவற்றை எடுத்துரைப்போராலும் கேட்போராலும் உண்மையாக நடந்தவை என்றே நம்பப்படுவன. ஆனால் அவை புராணக்கதைகளைப் போல மிகப்பழங்காலத்திலன்றி அண்மைப் பழங்காலத்தில் தற்போதைய உலகில் நடந்தவையாகக் கருதப்படும். பழமரபுக் கதைகள் பொரும்பாலும் சமயச் சார்பற்றவையாகவும் சில வேளைகளில் சமையச் சார்புடையவையாகவும் அமையும். பெரும்பாலும் புனிதத் தன்மை கொண்டவையாகக் கருதப்படுவதில்லை. அவற்றில் வரும் பாத்திரங்கள் பெரும்பாலும் மனிதர்களே. மனிதர்கள் ஏன் இடம்விட்டு இடம் பெயர்ந்து வந்தார்கள்? போர், வெற்றிகள், பழங்கால வீரர்கள், தலைவர்கள், அரசர்கள், புலவர்கள், புனிதர்கள் முதலியோரின் வீர தீரச் செயல்கள், செயற்கரிய செயல்கள், புதுமைகள், ஓர் அரசபரம்பரை எவ்வாறு உருவாயிற்று? ஓர் ஊர் எவ்வாறு உருவாயிற்று, ஓர் ஊருக்கு ஏன் அப்பெயர் வந்தது? என்பவை பற்றி எல்லாம் பழமரபுக்கதைகள் அமையும். ஆனால் இவை எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களுக்கு மாறாக வாய்மொழியாகச் சொல்லப்பட்டு நம்பப்பட்டு வருபவை. மேலும் மறைத்து வைக்கப்பட்ட புதையல் பற்றியும் பழமரபுக்கதைகள் நாட்டாரிடையே வழங்கி வருதலைக் காணலாம்” என்பதாகும் (Lourdu, 2016).

## கதைமாந்தர்கள்

### நாட்டுப்புறக் கதைகளில் கதைமாந்தர்கள்

கதைகள் வடிவம் பெறத் தேவைப்படும் அடிப்படைக் கூறுகளில் கதைமாந்தர்களின் படைப்பு என்பது இன்றியமையாததாக உள்ளது. நாட்டுப்புறக் கதைகள் பெரும்பாலும் கதைமாந்தர்களின்

படைப்பை மையமாகக் கொண்டு வகைபடுத்தப்படுகின்றன. அவற்றில் ஒரு வகைப்பாடான சு. சண்முகசுந்தரம் அவர்களின் வகைப்பாடு பின்வருமாறு அமைகிறது (SakthiVel, 2013).

- மனிதக் கதைகள் (மனிதர்கள்)
- மிருகக் கதைகள் (மிருகங்கள்)
- மந்திரக் கதைகள் (அரக்கர், அரக்கி)
- தெய்வக் கதைகள் (தேவதை, தெய்வம்)

## ஜென் கதைகளில் கதை மாந்தர்கள்

ஜென் கதைகளில் கதைமாந்தர்களாக பெரும்பாலும் மனிதர்கள் இடம் பெறுகின்றனர். குருக்கள், சீடர்கள், அரசர்கள், மக்கள் போன்ற பல மனிதர்களின் பெயரில் ஜென்கதைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கதைகள் அனைத்தும் அனுபவத்தால் அறிந்த புதுமையான செய்திகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு வாய்மொழியாக கடத்தப்பட்டுள்ளதால், கதைகளைக் கூறியவர் பெயரைக் கதைமாந்தராய் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கருதப்படுகிறது. தே.லூர்து உரைத்தவைப் போல, இக்கதைகள் எடுத்துரைப்பவராலும் கேட்போராலும் உண்மை நிகழ்வு என்று நம்பப்படும் வகையில் அமையப்பெற்றுள்ளன.

## ஜென் கதைகளில் துவக்கமும் முடிவும்

நாட்டுப்புறக் கதைகளின் துவக்கம் மற்றும் முடிவு ஆகிய இரண்டும் கணிக்கக்கூடியதாக அமைகின்றன. இதனை தே. லூர்து நாட்டார் கருவி வழக்காற்றுக் கூறுகள் எனப் பின்வருமாறு கூறுகிறார். மரபான தொடக்க வாய்ப்பாடுகளும், முடிக்கும் வாய்பாடுகளும் இதனுள் அடங்கும். முன்னொரு காலத்தில், ஒரேயொரு ஊரிலே என்று தொடங்கினவுடன், ஒருவர் கதை தான் சொல்லப் போகிறார் என்று கதை கேட்க எல்லோரும் எச்சரிக்கையாகிவிடுவர். கதையை முடிக்கும் போது, சிலர் “கதையும் முடிஞ்சது கத்தரிக்காயும் காச்சது” என்று முடிப்பர். சிலர் கதை உண்மையாக நடந்தது என்பது போல் நானும் போயிருந்தேன். எனக்கு வேட்டி சட்டெ எடுத்துக் குடுத்தாவ என்று கூறுவார் (Lourdu, 2016).

ஜென் கதைகளின் துவக்கம் இடப் பெயர்களையும், கதைமாந்தார் பெயர்களையும், சுட்டுப் பெயர்களையும் கொண்டு அமைகின்றன. சான்று,

ஒரு - ஒரு நாள், ஒரு நூலகம், ஒரு குரு

அந்த - அந்த குரு, அந்த ஆசிரமம்

அது - அது ஒரு பௌத்த விஹாரம்

இடம் - சீனாவின், நகரத்திற்கு, மௌரிய சாம்ராஜ்யத்தின், இமயமலை

கதை மாந்தர் - குருக்கள், சீடர்கள், அரசர், மக்கள்

இது போன்ற குறிப்பிடத்தக்க சொற்களைக் கொண்டு ஜென் கதைகள் துவங்குகின்றன. இதுத் தவிர்த்து கதைமாந்தர், இடம் குறித்த தன்மைகளை உணர்த்தக் கூடிய வாக்கியங்களிலும் ஜென்கதைகள் துவங்குகின்றன. ஜென் கதைகளின் முடிவானது நீதி கருத்துகளையும், அறிவுரையளிக்கும் கருத்துகளையும் / இயல்பு நிலையை வலியுறுத்தும் கருத்துகளைக் கொண்டும் முடியப்பெறுகின்றன. இதுமட்டுமின்றி, இக்கதைகள் முடிவுகளைப் பெற கூறுபவரால் இறுதியில் “முற்றிற்று” எனும் செய்தியினை வழங்கக் கூடியவையாகவும் அமையப் பெற்றுள்ளன. சான்றிற்கு ஓரிரு ஜென் கதைகளைச் சுருக்கமாக காணலாம்.

தவறு என அறிந்தும் அதனைச் சரி செய்யாமல் விடுவதன் வழி, அத்தவறானது ஒருவனின் வாழ்க்கை விட்டு நீங்காது நிலைகொள்கிறது. அதனை கண்டறிந்தது நீக்க வேண்டும் என்பதனை பின்வரும் கதையானது விளக்குவதாய் அமைகின்றது.

ஒரு ஊரில் நண்பர்கள் இருவர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் ஜென் துறவியின் ஆலோசனை பெற விரும்பி அவரைக் காணச் சென்றனர்.

ஜென் துறவியை கண்டதும் பணிவுடன் வணங்கி, எங்களுக்கு அறிவுரை வழங்கும்படி வேண்டிக் கொண்டனர். ஜென் குருவும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தன்னால் முயன்ற அறிவுரையினை வழங்கினார்.

பின்பு அங்கிருந்து கிளம்பும் தருவாயில், அவ்விருவரில் ஒருவன் துறவியின் முன்பே தனது சட்டையைக் கழட்டி மாட்டினான்.

மற்றொருவன் என்ன காரியம் செய்தாய்? என்று வியப்புடன் கேட்டான்.

அதற்கு அவன் நான் சட்டையைத் தவறாக திருப்பி அணிந்திருந்தேன். அதை சரி செய்தேன். அவ்வளவுதான் என்றான்.

அதனைக் கேட்ட மற்றொருவனுக்கும் துறவியின் அறிவுரை புரிந்தது (Priyabalu, 2016).

இவ்வுலகில் நன்மை, தீமை ஆகியவை அவரவர்கள் கண்ணோட்டத்தைப் பொருத்து அமைகின்றன. அதனைப் பின்வரும் ஜென் கதையின் வழி அறியலாம்.

ஒருவன் ஜென் துறவியைச் சந்தித்து, இவ்வுலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டான்.

அதற்கு துறவி பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று கேட்டார். அதனைக் கேட்ட அவன் ஒன்றும் விளங்கவில்லை என்று துறவியிடம் விளக்கம் கேட்டான்.

பூனையின் பல்லானது தான் ஈன்ற குட்டியைத் தூக்கிச் செல்லும் பொழுது மென்மையானதாகவும், அதே பூனையின் பல் தன் இறையான எலியினை வேட்டையாடும் பொழுது கூர்மையாகவும் காட்சியளிக்கும். அதுபோல தான் இவ்வுலகம் என்றார் துறவி (Priyabalu, 2016).

## நாட்டுப்புறக் கதைகளும் ஜென் கதைகளும்

கதை என்பதற்கு சொல்லுதல் என்பது பொருள். நாட்டார் கதைகள் இடம் விட்டு இடம், நாடு விட்டு நாடு கடந்து செல்பவை. அதுமட்டுமின்றி பண்பாட்டிற்கு ஏற்பத் தழுவியமைத்துக் கொள்ளப்படுபவை. கதைகள் சொல்லப்படுதற்கே உரியவை. அவை நெடுங்காலம் நீடித்து நிலைத்திருக்க வேண்டுமென்றால் அவை கதைக்கப்பட வேண்டும். பின்வரும் கதையானது கதைகள் கதைக்கப்படுவதற்கான அவசியத்தை உணர்த்தக் கூடியதாக அமைகின்றது (Lourdu, 2016).

"ஒருத்தனுடைய வீட்டுக்காரிக்கு ஒரு கதை தெரியும் அவளுக்கு ஒரு பாட்டுந் தெரியும் ஆனா அவ அவற்றே யாருக்கிட்டயுந் சொல்லவுமில்லே, பாடவுமில்லே.

அவளுக்குள்ளெயே செறெப்பட்டுக் கிடந்த அந்த கதையும் பாட்டும் விடுதலை அடைய விரும்பின அவளெ விட்டு ஓடணன்னு நெனெச்சுக்க ரெண்டு செருப்புகளை வடிவெடுத்து வீட்டுக்கு வெளியே உக்கார்ந்துக் கிடிச்சு. பாட்டு ஒரு கோட்டாக மாறி வீட்டுக்குள்ளே ஒரு ஆணியிலே தொங்குச்சு.

வீட்டுக்கு வந்த புருசன் கோட்டையுஞ் செருப்புகளையும் பார்த்துட்டு "யாரு வந்தது" ன்னு கேட்டான்?

"யாரும் வரல்லேயே" ன்னா அவ. அவனுக்குத் திருப்தியில்லே. அவனுக்கு சந்தேகம் வந்துருச்சு. அவங்கரெண்டு பேரும் சண்டை போட்டுக்கிட்டு, அவன் அனுமாரு கோயிலுக்கு ஒரு போர்வெயெ எடுத்துக்கிட்டுப் படுக்கப் போயிட்டான்.

பொண்டாட்டிக்கி என்ன நடக்குதுன்னு ஒண்ணுமே புரியலே. அண்ணக்கி ராத்திரி அவ தனியா படுத்துக்கிட்டு யோசிச்சா. நெடு நேரந் தூங்கலே. யாரு செருப்பு? யாரு கோட்டுன்னு? திரும்பத் திரும்பக் கேட்டுக்கிட்டா. பதிலில்லே. வெளக்கே அணைச்சிட்டுத் தூங்க போனா.

அணைச்ச பெறகு வெளக்குக(சுடர்கள்) எல்லாம் அனுமாரு கோயிலுக்கு வந்து சேருகிறது வழக்கம். ஒரே ஒரு வீட்டு வெளக்கத் தவிர மத்ததெல்லாம் வந்து சேந்துருச்சு. அது மட்டும் பிந்தி வந்துச்சு. மத்ததெல்லாம் "இன்னக்கி மட்டும் நீயேன் ரொம்ப பிந்தி வர்றேன்னு கேட்டுச்சுக.

'எங்க ஊட்டுலே புருசன் பொண்டாட்டி சண்டே போட்டுக்கிட்டாகன்னு', சுடர் சொல்லுச்சு.

'ஏஞ் சண்டே போட்டாக?'

நடந்த எல்லா வெவரங்களையும் அது சொல்லுச்சு, கதையும் பாட்டுந்தான் செருப்புகளாக, கோட்டாக மாறுனதையுஞ் சொல்லிச்சி. போத்திக்கிட்டு படுத்துருந்த புருசங்காரன் அதக் கேட்டுக்கிட்டுந்தான். அவெஞ் சந்தேகந் தீந்து போச்சு. விடிஞ்சபொறவு வீட்டுக்குப் போனான். எல்லாத்தெயும் பொண்டாட்டிக்கிட்டே சொன்னான். அந்தக் கதெயும் பாட்டும் அவளுக்கு மறந்து போச்சுங்கிறத அவ அப்பறந்தான் தெரிஞ்சுகிட்டா.

இக்கதையானது கதைகள் கதைக்கப்பட வேண்டும்; நாட்டுப்புற இலக்கியங்கள் அனைத்தும் மீண்டும் மீண்டும் வாய்மொழிகளால் பதிவு செய்வதன் வழியே, உயிர்புடன் நிலைநிறுத்தப்படுகின்றன என்பதனை உணர்த்துவதாய் அமைகிறது. தற்காலங்களில் நாட்டுப்புற இலக்கியங்களும் நூல்களில் பதிவு செய்யப்படுகின்றன.

## ஜென் கதைகள் புலப்படுத்தும் கருத்துகள்

ஜென் கதைகள் தனி மனிதனின் வாழ்க்கையில் துவங்கி சமூகம் எனும் அமைப்பு வரை முறைப்படுத்தி செயல்படக்கூடிய கருத்துகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. இக்கதைகள் மனிதர்களுக்கிடையேயான அறியாமையைப் போக்கும் வகையிலான கருத்துகளையும், இவ்வுலக இயல்புகளையும் புலப்படுத்துவதாக அமைகின்றன. இத்தகைய ஜென் கதைகள் வழி திரட்டப்பட்ட கருத்துகளை ஞானமும் அறியாமையும், வினை, ஆசையின்மையும் நிலையாமையும், உள்ளதை ஏற்றல் எனும் நான்கு பிரிவுகளாக இங்கு பாகுபடுத்தப்பட்டுள்ளன, அப்பிரிவுகளுக்குக் கீழ் ஜென் கதைகள் புலப்படுத்தும் கருத்துகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

## ஞானமும் அறியாமையும்

ஜென், அறியாமையையே ஞானம் எனக் கூறுகின்றது. இதனை அடிப்படையாய் கொண்ட கருத்துகளும், ஞானம் பற்றி ஜென்கதைகளில் இடம்பெறும் பிற கருத்துகளும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

- தியானம் ஞானத்திற்கான பாதையைக் காட்டும் வழியல்ல. தங்களைக் குறித்து அறியவும், தங்களின் எண்ணங்களைக் கட்டுப்படுத்தவும் வழிகாட்டுவதாகும்.
- தியானம் தனிமையை உணரச் செய்யும். தேடலையடைய உறுதுணையாய் இருக்கும்.
- மனிதனுக்காகவே மதம். மதத்திற்காக மனிதன் என்பது அறியாமையாகும்.
- சிந்தித்து பொறுமையாகச் செயல்படுவதே ஞானம். பொறுமை காத்தல் உண்மைகளைப் பகுத்துக் காட்டும்.
- கண் காட்டும் வழியானது ஏமாற்றத்தை அளிக்கலாம். ஆனால் உயர்ந்த சிந்தனைகள் ஒருபோதும் ஏமாற்றத்தைத் தருவதில்லை.
- கேள்விகள் ஞானத்தின் பிறப்பிடமாகும்.
- தன்னால் முடிந்த ஒன்றிற்காக உழைப்பினை வழங்கலாம். தன்னால் இயற்ற முடியாததை முடியாது என ஒப்புக் கொள்வதிலும் ஞானம் வெளிப்படும்.

- நாடு, மொழி, மதம் என இவற்றை வளப்படுத்துவது பயனில்லை. மக்களுக்குத் தேவையானதை உணர்ந்துக் கொள்வதே ஞானம்.
- இறைவன் என உடலை வருத்துவதைக் காட்டிலும், பசித்தால் உண்ண வேண்டும் எனும் இயற்கையின்படி இயல்பாய் இருத்தல் ஞானதின் சார்பாகும்.
- எதிர்காலம் பார்க்கும் சுயநல சிந்தனைகள் அறியாமையின் பாற்படும். நிகழ்காலத்தில் செயல்படுத்தும் பொதுநலச்செயல்கள் ஞானத்தின் வெளிப்பாடாகும்.
- நடு நிலையான மனதோடு கவனம் தவறாமல் செயல்படுவதே ஞானம். சிந்தனைகளில் தெளிவு வேண்டும்.
- உடலைப் பேணுவது அறியாமை. உயிர் உள்ளவரை உண்மைகளைத் தேடுதலும் உடலின் பயனை உணரலும் ஞானத்தை வெளிப்படுத்துகிறது.
- ஞானம் தேடிப் பெறுவது அல்ல. தேடலின் போது கிடைப்பது.
- விவாதிப்பதையும், மறுத்துப் பேசுவதையும் தவிர்த்து, உள்ளதை உள்ளபடியே ஏற்றுக் கொள்ளும் புரிதலை ஞானம் வழங்கும்.
- பொறுமை காப்பது ஞானத்தின் அடிப்படையான செயலாகும்.
- உபதேசங்கள் வழி பெறுவது ஞானமன்று. இயல்பான வாழ்வின் வழி செல்வதினால் பெற முயல்வதே ஞானம்.
- விவாதத்தில் காரணம் இல்லா நிலையில் அமைதி காக்கும் தன்மையை ஞானம் வழங்குகிறது.
- வழிபாட்டிற்காக வழிபடுவதை விடுத்து, மரியாதை நிமித்தமாக வழிபடுவதே ஞானம் கற்பிக்கும் வழிபாடு.
- பெருமைகளை ஏற்காத தன்னடக்கம் சிறந்த ஞானமாகும்.
- தேவையறிந்து உதவும் இடத்தில் ஞானத்தின் வெளிப்பாடு தோன்றும். செய்யும் உதவிகள் வீணடிக்கப் படக் கூடாது. வினையானது பயனுள்ளதாய் அமைய வேண்டும்.
- உண்மைகளை உண்மை என ஆராயாமல் ஏற்பது அறிவின்மையாகும். உண்மையானது உண்மையில்தான் உள்ளது. அது எது? என்பதே ஞானத்தின் வழி ஏற்படும் உயர்ந்த சிந்தனையாகும்.
- நாள் விடிவது என்பது சூரிய ஒளியைக் கொண்டு அறியப்படும். மக்களிடையே விடியல் என்பது காண்போரை எல்லாம் உடன் பிறந்தவர் என நினைக்கும் எண்ணத்தில் பிறக்கும். இவ்வெண்ணமும் ஞானத்தின் பாற்பட்டதாகும்.
- கொள்கைகளைத் தனி ஒருவரின் சுயநலத்திற்காக சிதைக்க கூடாது. அதாவது, மனிதநேயச் செயல்களைக் கொண்டு தீய ஒழுக்கத்தை நாடுதல் கூடாது.
- நியாயம் இருக்கும் நிலையில், தன் செயலுக்கான நியாயம் தேடலாம். வீண் விவாதம் கூடாது.
- எழுதப்பட்ட வேதங்களைக் காப்பதைக் காட்டிலும் அறியாமை இவ்வுலகில் ஏதுமில்லை.
- செய்வதை முழு கவனத்தோடு முழுமையாய் செய்து முடிக்கும் பண்புடையது, ஞானம்.
- பற்றற்ற உள்ளம் ஞானத்தின் பிறப்பிடம்.
- கேள்விக்கான பதில் முடியும் இடத்தில் தோன்றும் கேள்வியில் ஞானம் பிறக்கிறது.
- தவறுகளை மறக்கவும், மன்னிக்கவும் ஞானம் உறுதுணையாய் அமைகிறது.
- சிக்கலைத் தேடிச் சென்று அணுகவும், அதனைச் சரி செய்யவும் ஞானம் தூண்டுகோலாயமைகிறது.
- தவறுகளைத் தவறு என உணர்வதும் ஞானம் தான்.
- எதையும் தேடாமல் இருப்பது எப்படி என அறிவதும் ஞானமே.
- அறிவு ஆணவத்தை அளிக்கும். அறியாமையே அனுபவத்தை அளிக்கும்.
- நான் எனும் அறியாமை நீங்கும் இடத்து ஞானம் பிறக்கும்.

## வினை

இவ்வுலகில் இயல்பாகவும், இயல்பற்ற நிலையிலும் எவையெல்லாம் எத்தகைய வினைக்கு உட்படுகிறது எனப் பெற்ற ஞானத்தின் வழி வழங்கிய, ஜென் கதைகளில் வெளிப்படும் கருத்துகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை,

- கோபத்தில் செய்யும் செயல்கள் என்றும் நிலையானவையல்ல. பொறுமையோடு கோபத்தைத் தவிர்ப்பது அமைதியை வழங்கும்.
- சிக்கலுக்கானத் தீர்வு வன்முறையன்று. பொறுமையுடன் சிந்தித்து செயல்படுவதே சிக்கலுக்கான நிரந்தர தீர்வை அளிக்கும்.
- தெரியாததைத் தெரியும் எனக் கூறி தவறிழைப்பதைக் காட்டிலும் இயல்பை வெளிப்படுத்துவது நன்று.
- நன்மைகளும் தீமைகளும் அவரவர் ஆற்றும் வினைகளின் வழி பெறப்படும் பயனாகும்.
- உழைப்பிற்கும் ஓய்விற்கும் இடைப்பட்டதே இயல்பான வாழ்வு. நடுநிலைத் தவறினால் வாழவும் முடியாது. வாழ்ந்தும் பயனிருக்காது.
- பசியைப் போக்குவது தவத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகும்.
- மன்னிப்பு குற்றங்களுக்கு வழங்கும் மிகக் கொடிய தண்டனையாகும்.
- அவரவர் பசிக்கு அவரவர் உண்ணுவது போல் அவரவர் தேவைகளை அவரவர் பூர்த்தி செய்வதே இயல்பு. இயல்புக்கு மாறாய் நிகழ்த்தப்படும் வினைகள் எதிர்பார்ப்புகளுடனே நிகழும்.
- "தான்" என்ற ஆணவத்திற்கு உரிய செயல் தன்னை அழிவின் பாதையை நோக்கி எடுத்துச் செல்லும்.
- சரி, தவறு, விருப்பு, வெறுப்பு எனும் அனைத்தும் எண்ணங்களின் வழியே வினையாக உருப்பெறும். பற்றற்ற வினையால் ஏற்படும் பாதிப்புகள் வந்த வண்ணமே மறையும்.

## ஆசையின்மையும் நிலையாமையும்

இவ்வுலகில் நிலையானது என எதுவுமில்லை. பற்று எனும் உணர்வும் கூட மாற கூடியதே; பற்றை விடுத்து இயல்பாய் வாழ்வது பயனுள்ளது என ஜென் கதைகள் வழங்கும் கருத்துகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

- காலம், மாற்றத்திற்கான பாதையை அமைத்துச் செல்லக் கூடியது. அது யாருக்காகவும் காத்து இருப்பதுமில்லை, நின்று விடுவதுமில்லை.
- இவ்வுலகில் தோற்றம் பெறும் அனைத்தும் ஒரு நாள் அழிவுக்குட்படும். அதுவே உலக நியதி. இங்கு நிலையானது என எதையும் வரையறை செய்துவிட முடியாது.
- விரும்புவதை அடைய இயலாமல் போனாலும், அடைந்ததைக் கொண்டு மகிழ வேண்டும். தேவைகள் என்பது ஏராளமாய் உள்ளது. ஆகையால், இருப்பதையே நிறைவான மகிழ்ச்சிக்கு உரியது என எண்ணல் வேண்டும்.
- நேற்று, இன்று, நாளை எனும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவையை எண்ணி கவலை கொள்வதைக் காட்டிலும், இவ்வுலகில் உள்ள வரை வாழ்வை பயனுள்ளதாக்கிச் செல்லல் வேண்டும்.
- உயிர் உள்ளவரைதான் உடலின் பயன்பாடு. இறந்தப்பின் உடலால் எந்த ஒரு பயனும் இல்லை. ஆகவே உடலைப் பேணுவதைக் காட்டிலும் உள்ளவர்களைப் பேணுதல் சிறந்தது.
- அறிவு, நிலைப் பெறாதது. அறியாமையே நிலையானது.
- தனது என உரிமை கொள்ள இவ்வுலகில் எதுவுமில்லை, தன்னுள் எழும் கருத்து முதற்கொண்டு.
- உரிமைக்கொள்ள எதுவும் இல்லா நிலையில் இழப்பதற்கும் இங்கு எதுவும் இல்லை. ஆசையில்லா இடத்தில் இப்பண்பு இருக்கும்.
- எதிர்பார்ப்பு இல்லாத தேடலில், ஆசைக்கு இடமில்லை. “ஆசையைத் துறப்பேன்” என்பதும் ஒரு வித ஆசைதான்.
- ஞானம் என்பது நிலையாமையே. ஞானத்தை அடைய வரும் அனைவரும் தங்களது பயணத்தை மேற்கொள்வது இல்லை. காரணம், ஞானத்தின் மீது கொண்ட ஆசை நிலைத்து நிற்பதில்லை.

## உள்ளதை ஏற்றல்

இவ்வுலகில் இயல்பாய் நிகழும் அனைத்தையும் ஏற்றுக் கொள்வது இயல்பு என ஜென் கதைகளில் கூறப்படும் கருத்துகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

- ஒரு நாள் என்பது இரவு - பகல் என இரண்டு பிரிவுகளை உடையது. இதேபோல்தான் வாழ்வும்,
    - இன்பம் - துன்பம்,
    - நன்மை - தீமை,
    - பிறப்பு - இறப்பு

  என பல்வேறு தன்மையில் பிரித்துப் பார்க்கப்படுகிறது. இவை அனைத்தும் இயற்கைக்கு உட்பட்டது. இரவானது பகலை ஏற்பதைப் போல் இயல்பான அனைத்தையும் ஏற்று அதன் வழியில் செல்ல வேண்டும்.
- அமைதிக்கான வழி தியானமல்ல. உள்ளதை உள்ளவாறு ஏற்றலுக்கு உறுதுணையாய் அமைவதே தியானம்.
- மாற்றம் ஒன்றே மாறாதது. பருவங்கள் மாறுபடுவதுப் போல் மாற்றங்களையும் ஏற்றல் வேண்டும்.
- நினைவிலி கனவுகளை எவராலும் முறைபடுத்தி வழி நடத்த இயலாது. அதேபோலதான் வாழ்வும். சூழலுக்கு ஏற்ப உள்ளதை உள்ளவாறு ஏற்று வாழ வேண்டும் (பிறப்பு என்பது உறக்கம். இறப்பு தான் இதற்கான விடிவு. இடைப்பட்ட அனைத்தும் கனவேயாகும்).
- நன்றும் தீதும் அவரவர் பார்வையில் நிலைக்கொண்டு பிறப்பதாகும்.
- எதிர்பார்ப்புகள் இல்லாமல் செயல்பட வேண்டும். உழைப்புக்கு ஏற்ற பலனைப் பெறுவதே நிலையானது. இன்பத்திற்கான முதன்மை வழி இதுவேயாகும்.
- மரணங்களை மறுக்காது ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
- இறைவன் என்பது உண்மை இல்லாத உண்மை. உயர்பண்பின் இடத்து இறைப்பண்பு தோன்றும்.
- மரபு எனக் கூறப்படும் அனைத்தும் இதனைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துபவை. இவைகளைப் பின்பற்றுவதைக் காட்டிலும் நிகழ்காலத்தை உணர்ந்து செயல்பட வேண்டும்.
- வீழ்வது என்பது வாழ்வில் இயல்பு. இதனை ஏற்று மீண்டும் எழுவதே வெற்றிப் பாதையை நோக்கி வாழ்வினை நகர்த்திச் செல்லும்.
- இவ்வுலகில் காரணமின்றி எவையும் நிகழ்த்தப்படுவது இல்லை எனும் புரிதலுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும்.

இதுபோன்ற கருத்துகளை ஜென் கதைகள் வழி பெற முடிகின்றன. ஜென் கதைகள் ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துகளும் இடம் பெற்றிருக்கின்றன.

## 'ஜென்' சொல்லும் பொருளும்

ஜென் என்பதனை ஓஷோ பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"காணாமல் போன மூக்குக் கண்ணாடி எங்கே என்று எல்லா இடத்திலும் தேடிக் கடைசியில் தன் மூக்கின் மீது அது உள்ளது என்று அறிவதே ஜென்" (Guruji Vasudev, 2011).

மேலும், எதில் இருப்பினும் அதனை விலகாமலும் அதனில் மூழ்காமலும் தன் இயல்போடிருத்தலே ஜென் (Guruji Vasudev, 2011).

ஜென் என்ற சொல் பல மொழிகளில் பலப் பொருட்களில் பயன்பாட்டிலிருந்து வருகின்றது. அவற்றுள் ஐரோப்பிய மொழிகளுள் ஒன்றான செக் (Czech) மொழியிலுள்ள ஜென் என்ற சொல்லிற்கு 'வெறும்' என்றும், ஐரோப்பிய மொழிகளுள் மற்றொன்றான பாஸ்க் (Basque) மொழியிலுள்ள ஜென் என்ற சொல்லிற்கு 'அது இருக்கிறது' என்றும், சீன மொழியிலுள்ள ஜென் என்ற சொல்லிற்கு "எப்படி" என்றும், ஜப்பானிய மொழியிலுள்ள ஜென் என்ற சொல்லிற்கு "அனைத்து" என்றும் தமிழில் பொருள் கொள்ளப்படுகிறது (Google Translate) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜென் என்பது சமூக அமைப்பையும், கட்டுப்பாடுகளையும் வழங்குவதில்லை. மற்ற சமயக் கருத்துகளிலிருந்து தனித்து தனக்கெனத் தனிப்பட்ட கருத்துகளையும், கொள்கைகளையும் கொண்டுள்ளது. ஒரு தனிமனிதனின் உயிரானது உடலைக் கடந்த உயரிய சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான சிந்தனைகளையே தனது கொள்கையாக ஏற்றுள்ளது ஜென். இவற்றை ஜென் இலக்கிய வகைமைகளுள் ஒன்றான ஜென் கதைகள் வழி அறிய முடிகிறது.

## முடிவுரை

ஜென் கதைகள் சமயம் அற்ற நிலையில் தனது கருத்துகளை முன் வைக்கிறது. ஜென் கதைகள் குருமார்களால் போதிக்கப்பட்டிருந்தாலும், துறவு போன்ற கருத்துகள் இடம்பெற்று இருந்தாலும், சமயத்தை ஆதரிக்கும் கருத்துகளுக்கு இடமளிப்பதாய் அமையவில்லை. இயற்கை காட்டும் முறையில் இயல்பாய் வாழ்வதே வாழ்க்கை எனும் கருத்தை வலியுறுத்துவதாக ஜென் கதைகள் அமைந்துள்ளன. இயல்பு, வெறுமை, அறியாமை, தேடல்(கேள்வி) எனப் பல்வேறு கருத்துகளை வழங்குவதாகவும் ஜென் கதைகள் திகழ்கின்றன. குறிப்பாக நாட்டுப்புற கதை அமைப்புக்குள் அடங்குவனவாகவும் ஜென் கதைகள் அமைந்துள்ளன.

## References


Guruji Vasudev, (2011) Zen Thaththuva Kathaigal, Sixthsense Publications, Chennai, India.

Lourdu, D., (2016) Naattar Vazhakkatrial- Sila Adippadaigal, Naattar Vazhakkatrial Aaivu Mayyam, Pallayankottai, India.

Priyabalu, (2016) Zen kathaigal, Kannappan Pathippagam, Chennai, India.

Sakthi Vel, S. (2012) Naattuppura Iyal Aaivu, Manivasagar Pathippagam, Chennai, India.

Sanmuga Suntharam, S. (2013) Nattupuraviyal, Kavya Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License